




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 209 22.1.2026 THURSDAY THAI : 8 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 209 22.1.2026 வியாழக்கிழமை தை : 8 விலை : ரூ.5/–


## 90 மீனவர்கள், 254 படகுகளை

# "உடனடியாக விடுவிக்க நடவடிக்கை"

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (17.1.2026) பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை: ஜன.22-

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதை தடுத்திடவும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த







7 மீனவர்கள், இரண்டு மீன்பிடிப் படகுகளில் வழக்கமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் இன்று சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்று கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் இலங்கை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படுவதும் தடையின்றி தொடர்வது மிகுந்த கவலைக்குரியதாக உள்ளது . இன்றுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த மொத்தம் 254 மீன்பிடிப் படகுகளும், தற்போதைய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 90 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளனர்.

தொடர்ச்சியாக நிகழும் இத்தகைய கைது நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமூகத்தினருக்குக் கடுமையான இன்னல்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழக மீனவர்கள் இலங்கையில் நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், அவர்களது குடும்பத்தினருக்கு கடுமையான பொருளாதார நெருக்கடியினையும் தொடர்ச்சியான மன உளைச்சலையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய சம்பவங்கள், கடலோரப் பகுதிகளின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை ஆழமாகச் சீர்குலைத்துள்ளது.

எனவே, கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதைத் தடுக்கவும், ஒன்றிய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## ஒரே நாளில் நிதி உதவி வழங்கி பள்ளி மாணவிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்திய அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி, ஜன.22

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் என்.பஞ்சம்பட்டி அகஸ்தினார் பள்ளி மாணவிகள் ஸ்மார்ட் வகுப்பு இயந்திரம் வாங்கி நிதி உதவி கேட்டனர். ஒரே நாளில் நிதி உதவி வழங்கி அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பள்ளி மாணவிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், என்.பஞ்சம்பட்டியில் உள்ள அகஸ்தினார் பெண்கள் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் தங்களது பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பிற்காக இயந்திரம் வாங்குவதற்கு நிதி உதவி வழங்க வேண்டும் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்னர். மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பள்ளியைச் சேர்ந்த தலைமை ஆசிரியை ஜோஸ்வின் ஜெயமேரி, பட்டதாரி ஆசிரியைகள் பெட்ரீசியா, ஹேமலதா, அருட்சகோதரி ஞானமணி ஆகியோருடன் பள்ளி மாணவிகளை வரவழைத்து ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பிற்கு தேவைப்படும் இயந்திரம் வாங்கி நிதி உதவி வழங்கினார். தங்களின் கோரிக்கையை ஏற்று நிதி உதவி வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு அருட்சகோதரிகள் மற்றும் பள்ளி ஆசிரியைகள், மாணவிகள் மனதார நன்றி தெரிவித்தனர். நிகழ்ச்சியின்போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மெல்வின், என்.பஞ்சம்பட்டி கிளைச் செயலாளர் தாஸ் வேளாங்கண்ணி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



► விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான அறிவுசார் குறைபாடு தொழிற்கல்வி மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் அவர்கள் 20.01.2026 அன்று துவக்கி வைத்தார்.

## சீட்டு ஓட்டு யாருக்கு?

## பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி

# அதிமுகவுக்கா?.. பிஜேபிக்கா ?..



பிரபாகரன்



சந்திரகாசி



சுரேஷ்



தமிழ் செல்வன்



ராஜபூபதி

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் பெரம்பலூர்தான் சிறிய மாவட்டம். மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதிகளில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி, பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியிலும், குன்னம் சட்டமன்ற தொகுதி, சிதம்பரம் பாராளுமன்ற தொகுதியிலும், இடம்பெற்றிருக்கிறது. பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தனி தொகுதியாகும்.

திமுகவை பொறுத்தளவில் தற்போது எம்.எல்.ஏ வாக இருக்கும் பிரபாகரன் பெரிய அளவில் எதுவும் சாதித்து விடாவிட்டாலும், தொகுதியில் கெட்ட பெயர் இல்லை. அதே நேரத்தில் எம்.எல்.ஏ பிரபாகரன் பொறியியல் பட்டதாரி என்பதுடன் கட்சிக்காரர்களிடமும், பொது வெளியிலும் ஜென்டிலாக நடந்து கொள்ள கூடியவர். மறுபடியும் எம்.எல்.ஏ.பிரபாகரனுக்கே திமுகவில் சீட் கொடுக்கப்பட்டாலும், வெற்றி பெற வாய்ப்புள்ளது. ஆனால், நீலகிரி தொகுதி எம்.பி.யும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஆ.இராசாவின் உறவினரான வழக்கறிஞர் லாடபுரம் கண்ணன் என்பவர் பெயர் அடிபடுகிறது.

அதிமுகவிலோ இரண்டு முறை தொடர்ந்து எம்.எல்.ஏ வாக இருந்து வந்த மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன் மீண்டும் சீட் வாங்கி விடலாம் என்று பல வழிகளில் முயற்சி செய்து வந்தாலும், கட்சிக்காரர்களிடம் பெருத்த எதிர்ப்பை சம்பாதித்து வைத்துள்ளர். கட்சிக்காரர்களை யாரையும் மதிக்காமலும், சீனியர்களை அனுசரித்து போகாமலும் கட்சி தலைமை உத்தரவிடும் செயல்பாடுகளை சரிவர செய்யாமலும் இருந்து வருவதால் தற்போதைய நிலவரப்படி தமிழ் செல்வனுக்கு கேள்விக்குறியே நிலவுகிறது. இதற்கு உதாரணம் சமீபத்தில் பெரம்பலூர் மாவட்ட அமமுக முக்கிய நிர்வாகிகள் ஐந்து பேர் முன்னாள் எம்.பி. மருதராஜா தலைமையில், எடப்பாடி பழனிசாமின் சேலம் முகாம் அலுவலகத்தில் அதிமுகவில் இணைந்தனர். பொது செயலாளர் முன்னிலையில் அதிமுகவில், அமமுகவினர் இணைப்பு விழாவில் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன் இல்லை என்பதுடன் அந்தளவிற்கு தலைமையிலும், தொகுதியிலும் செல்வாக்கு இல்லை என்பதையே காட்டுகிறது. இச்சூழலில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி அதிமுகவிற்கு ஒதுக்கப்பட்டால் முன்னாள் எம்.எல்.ஏவும், முன்னாள் எம்.பி.யுமான சந்திரகாசிக்கோ, பெரம்பலூர் நகர கழக செயலாளரும், அதிமுகவில் மாவட்ட அளவில் இளைஞர் பட்டாளத்தை வைத்து கொண்டு துடிப்பாக செயல்படுபவருமான ராஜபூபதிக்கோ எம்.எல் ஏ .சீட் கிடைக்க பெரிய அளவில் வாய்ப்பு உள்ளது.

இது ஒருபுறமிருக்க கூட்டணி பாஜகவினரோ, எங்களுக்குத்தான் பெரம்பலூர் தொகுதி ஒதுக்க வேண்டும் என்று ஒற்றை காலில் நிற்கின்றார்கள். பாஜகவில் மாநில பொறுப்பு வகிக்கும் புவனா அசோக், கவுள்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலைசெல்வன், எப்போதும் கட்சி பணியாற்றும் நகர செயலாளர் சுரேஷ், தேவேந்திரபாலாஜி இவர்கள் ஒரு பக்கம் பாஜகவில் சீட் வாங்கிட முயற்சி செய்து வருகிறார்கள்.

அதிமுகவில் மாவட்ட செயலாளருக்கு கட்சியினர் ஒரு சேர எதிர்ப்பாக இருப்பதால், அநேகமாக பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி அதிமுக கூட்டணியில் பிஜேபி க்கு ஒதுக்கி விடவும் வாய்ப்புள்ளது.

## சத்துணவு ஊழியர் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்: தமிழக அரசுக்கு பாஜக வலியுறுத்தல்




சென்னை, ஜன.22-
தமிழக பாஜக செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த ஜனவரி 3ம் தேதி அரசு ஊழியர் சங்கங்களின் போராட்டத்தின் போது, தமிழக அரசு அறிவித்த புதிய அறிவிப்புகளில் சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்ததால், 71 ஆயிரம் சத்துணவு ஊழியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

2021 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், பணிக்கொடைத் தொகை ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.6,750 வழங்கப்படும் என்ற முதல்வர் ஸ்டாலினின் வாக்குறுதிகள் 5 ஆண்டுகள் ஆகியும் நிறைவேற்றப்படவில்லை.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை முதல்வர் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் பள்ளி மாணவர்கள் மதிய உணவு கிடைக்காமல் பெரிதும் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதால், தமிழக அரசு இதில் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

## மாமல்லபுரத்தில் பிப்ரவரி 2, 3 தேதிகளில் தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா முதலீட்டாளர் மாநாடு

சென்னை, ஜன.22-
தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா முதலீட்டாளர் மாநாடு மாமல்லபுரத்தில் பிப்.2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளதாக, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன், தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா ஆகியோர் தலைமைச் செயலகத்தில் நேற்று செய்தியாளர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர்.

அப்போது அமைச்சர் ராஜேந்திரன் கூறியதாவது: தமிழக சுற்றுலா துறையை மேம்படுத்தும் பொருட்டு சுற்றுலா துறைக்கென தனிக்கொள்கையை முதல்வர் உருவாக்கி கொடுத்துள்ளார்.

மாநிலத்தில் 300 சுற்றுலா தலங்களை மேம்படுத்த கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழக




பொருளாதாரத்தை 2030ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்த முதல்வர் இலக்கு நிர்ணயித்துள்ளார். அந்த பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலா துறையின் வளர்ச்சி 12 சதவீதம் அளவுக்கு இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

தற்போது சுற்றுலா துறையில் முதலீட்டாளர்களை கவரும்வகையில் தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா முதலீட்டாளர் மாநாட்டை நடத்த முதல்வர் முடிவெடுத்துள்ளார். இந்த மாநாடு பிப். 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் சென்னை அருகேயுள்ள மாமல்லபுரத்தில் முதல்வர் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் முதலீட்டாளர்கள் பங்கேற்கின்றனர். மருத்துவ சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, சாகச சுற்றுலா என அனைத்து வகை சுற்றுலாக்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் இந்த முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் டிஆர்பி ராஜா கூறியதாவது: இந்தியாவில் சுற்றுலா செல்வோரின் முதல் விருப்ப தேர்வாக இருப்பது தமிழகம்தான். தற்போது பாரம்பரிய சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா போன்றவற்றுக்கு மட்டுமே முக்கித்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. டிசம்பர், ஜனவரி என்றால் இசை விழா என்ற அளவில்தான் வெளியே தெரிகிறது. இதையும் தாண்டி ஏராளமான விஷயங்கள் உள்ளன.

அவற்றையும் நாம் கொண்டாட வேண்டியது அவசியம் என்பதுதான் முதல்வரின் சிந்தனை. தற்போது புதிய முயற்சியாக, சுற்றுலா மேம்பாட்டுக்கு தேவையான நிலங்களை எங்கள் துறையின் சிப்காட் நிறுவனம் தேர்வு செய்து வழங்கும். அதை சுற்றுலா துறை மேம்படுத்தும். இதுவரை இல்லாத புதிய முயற்சி இது.

இத்திட்டத்தின் கீழ், புதிதாக 40 இடங்களை அடையாளம் கண்டுள்ளோம். தமிழகத்தில் 1,076 கி.மீ. நீள கடற்கரை இருக்கிறது. ஆனால், இந்த நீண்ட கடற்கரையை சுற்றுலா மேம்பாட்டுக்கு நாம் இன்னும் முழுமையாக பயன்படுத்தவில்லை. கடற்கரை சுற்றுலா திட்டங்களை செயல்படுத்தினால் மீனவர்களின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் உயரும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, தமிழ்நாடு சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டுக்கான லோகோவை அமைச்சர்கள் இருவரும் அறிமுகப்படுத்தினர். பேட்டியின் போது சுற்றுலாதுறை செயலர் கே.மணிவாசன், சுற்றுலாத் துறை ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கரூர்: இளைஞர் கொலை வழக்கில் சகோதரர்கள் உட்பட 3 பேருக்கு ஆயுள் தண்டனை



கரூர், ஜன.22-
இளைஞர் கொலை வழக்கில் சகோதரர்கள் 2 பேர் உட்பட 3 பேருக்கு ஆயுள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தை அடுத்த பிச்சம்பட்டியைச் சேர்ந்தவர்கள் ராஜா(28), பிரபாகரன்(28). இவர்கள் இருவரும் 2021 ஜூலை 4ம் தேதி இருசக்கர வாகனத்தில் சென்றபோது, பிச்சம்பட்டியில் சாலையில் தனியார் கட்டுமான லாரி இடையூறாக நிறுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, அந்த லாரி ஓட்டுநர் செந்திலிடம் அவர்கள் இருவரும் தகராறில் ஈடுபட்டனர். செந்திலுக்கு ஆதரவாக தனியார் கட்டுமான நிறுவன மேற்பார்வையாளரான, மணவாசியை சேர்ந்த தர்மதுரை (29) பேசினார். தகராறை கண்ட அப்பகுதியைச் சேர்ந்த கொத்தனார் பிரபு(35) இருதரப்பினரையும் சமாதானப் படுத்தி, அனுப்பிவைத்தார்.

பின்னர், பிச்சம்பட்டி பகவதிஅம்மன் கோயில் முன்பு ஜூலை 5ம் தேதி சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றபோது, தர்மதுரை உள்ளிட்ட 10க்கும் அதிகமானோர் திடீரென கத்தி, அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் பிரபுவை வெட்டிவிட்டு தப்பிவிட்டனர். இதில் காயமடைந்த பிரபு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

இதுகுறித்து மாயனூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தர்மதுரை, இவரது சகோதரர் ராஜதுரை(31) மற்றும் அபிஷேக்(27) ஆகியோர் உட்பட 14 பேரை கைது செய்தனர். கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கு நடைபெற்றது.

இதில், குற்றம் சுமத்தப்பட்ட ராஜதுரை, தர்மதுரை, அபிஷேக் ஆகியோருக்கு ஆயுள் சிறை தண்டனையும், தலா ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து நீதிபதி கே.ஹெச்.இளவழகன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். மற்ற 11 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

## “என்டிஏ எனும் மூழ்கும் கப்பலில் தினகரன்...” செல்வப்பெருந்தகை கருத்து



சென்னை, ஜன.22-
“தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ள டிடிவி தினகரன் நேற்று வரை எடப்பாடி பழனிசாமியை துரோகி என்றெல்லாம் கடுமையாக விமர்சனம் செய்தவர். கூட்டணியில் சேர்ந்தும் எடப்பாடி பழனிசாமி பெயரை சொல்வதையே அவர் தவிர்க்கிறார்” என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, “தமிழக மக்கள் அதிமுக பாஜக கூட்டணியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்டிஏ கூட்டணியில் இணைந்துள்ள டிடிவி தினகரன் நேற்று வரை எடப்பாடி பழனிசாமியை துரோகி என்றெல்லாம் கடுமையாக விமர்சனம் செய்தார்.

இப்போது எப்படி எடப்பாடி பழனிசாமியுடன் சேர்ந்து டிடிவி தினகரன் அரசியல் செய்யப் போகிறார், மேடை ஏறப் போகிறார் வாக்கு கேட்கப் போகிறார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

டிடிவி தினகரன் இன்று கூட்டணியில் சேர்ந்தும் இபிஎஸ் பெயரை சொல்வதையே தவிர்க்கிறார். ஆகவே, இந்த கூட்டணி தமிழக மக்களால் நிராகரிக்கப்பட்ட கூட்டணி. மோடி ஒரு முறை அல்ல, 100 முறை வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழகத்துக்கு நிதி ஒதுக்குவோம் என பாஜக கூறி வருகிறது. தமிழக மக்களை மண்டியிட வைப்போம் என சொல்லும் பாஜக, எப்படி அதிமுகவுடன் சேர்ந்து தமிழகத்தில் வாக்கு கேட்பார்கள்?

பிரதமர் மோடி ஒடிசாவுக்கு சென்றால் தமிழகத்தில்தான் ஒடிசாவின் கஜானா சாவி இருக்கிறது என்று பேசுகிறார். பிஹாருக்கு சென்றால் பிஹாரிகளை தமிழக மக்கள் வஞ்சிக்கிறார்கள் என்று கூறுவார். இப்படி எல்லாம் பேசிவிட்டு தமிழக மக்கள் யாரும் விவரம் இல்லாதவர்கள், மறந்துவிடுவார்கள், பாஜகவுக்கு வாக்களிப்பார்கள் என்று பேராசையோடு படையெடுக்கிறார்கள். இந்த படையெடுப்பை தமிழக மக்கள் முறியடிப்பார்கள்.

என்டிஏ கூட்டணி ஒரு மூழ்கும் கப்பல். அந்தக் கப்பலில் யாரெல்லாம் பயணிக்கிறார்களோ அவர்களும் சேர்ந்துதான் மூழ்கிபோவார்கள்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## “ஊரக வேலை திட்டத்தை சீர்குலைக்கிறார் பிரதமர் மோடி”

### ராகுல் காந்தி குற்றச்சாட்டு

“ரேபரேலி, ஜன.22-
மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தனது மக்களவை தொகுதியான ரேபரேலிக்கு நேற்று சென்றார்.

அங்கு கட்சித் தொண்டர்களிடையே அவர் கூறியதாவது: மத்திய அரசு ‘மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின்' பெயரை மாற்றியதன் மூலம் அந்தத் திட்டத்தை அவமதித்துள்ளது. மிக முக்கியமாக, விளிம்புநிலை மக்களுக்கு இத்திட்டம் வழங்கி வந்த பாதுகாப்பை அரசு திரும்பப் பெற்றுள்ளது. இது ஜனநாயகத்தின் வேர்கள் மீதான தாக்குதலாகும். இதன் மூலம் இந்த திட்டத்தை பிரதமர் மோடி சீர்குலைக்கிறார்.



மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பாதுகாக்க காங்கிரஸ் நாடு தழுவிய இயக்கத்தை நடத்தி வருகிறது. நாங்கள் தொழிலாளர்களின் பக்கம் நிற்கிறோம், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதியுடன் இருக்கிறோம்.

ஆனால், நாட்டின் செல்வம் முழுவதும் கவுதம் அதானி மற்றும் முகேஷ் அம்பானி ஆகிய இரு தொழிலதிபர்களின் கைகளில் மட்டுமே குவிய வேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார். இவ்வாறு அவர் தெரிவித்தார். முன்னதாக, ரேபரேலியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றை ராகுல் காந்தி தொடங்கி வைத்தார்.

## தருமபுரி கடத்தூர் ஒன்றியத்தில் வறண்ட ஏரிகளால் விவசாயம் பாதிப்பு!



அரூர், ஜன.22-
கடத்தூர் ஒன்றியத்தில் வறண்டுள்ள ஏரிகளால் விவசாயம் பாதிப்படையும் வாய்ப்புள்ளதால், இப்பகுதியில் வறட்சியை போக்க புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் கடத்தூர் ஒன்றியப் பகுதி, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்த அபாயகரமான பகுதிகளில் ஒன்றாக பொதுப்பணித் துறையால் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடத்தூர் ஒன்றியப் பகுதியில் போதிய நீர் சேமிப்பு பகுதிகளாக அணைகளோ, தடுப்பணைகளோ, ஆறுகளோ இல்லாதது மட்டுமின்றி, நீர் மேலாண்மை குறித்த புரிதல் மக்களிடம் குறைவாக இருப்பதும் காரணமாக கூறப்படுகிறது.

நீர் சேமிப்புக்கேற்ற நிலவியல் அமைப்பு இல்லாததால் பருவ மழை காலத்தில் கிடைக்கும் நீரை மட்டுமே விவசாயத்துக்கு பயன்படுத்தும் நிலை உள்ளது. இதனால் விவசாயத்திற்கு மட்டுமின்றி குடிநீருக்கும் தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதியாக கடத்தூர் பகுதி உள்ளது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்பாட்டிற்கு வந்த பின்னர் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக பருவமழை போதிய அளவில் பெய்ததால் பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். இந்நிலையில், நடப்பு நிதியாண்டில் சாரசரி அளவை விட பருவமழை குறைவாக பெய்ததால் பெரும்பாலான ஏரிகள் வறண்ட நிலையிலேயே உள்ளன.

பெரும்பாலான கிணறுகளில் நீர்மட்டம் பாதியளவிற்கு குறைந்து விட்டது. இதனால் வரவிருக்கும் கோடைகாலமான மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கு முன்னதாகவே தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். எனவே, நிரந்தர நீராதாரத்தை உண்டாக்கிடும் வகையில் திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும் என பொதுமக்கள், விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து, தமிழ்நாடு உழவர் பேரியக்க மாநில செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான இல.வேலுசாமி கூறியதாவது: கடத்தூர் ஒன்றியப் பகுதியில் நீராதாரத்தை வலுப்படுத்தும் திட்டங்களாக 4 திட்டங்களை பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் மூலம் ஏரிகளில் நீர் நிரப்புதல், தென் பெண்ணையாற்று நீரை நீரேற்றம் செய்தல், வேப்பாடி ஆற்றில் அணை கட்டி கால்வாய் மூலம் நீர்வழங்கல், பொதியன் பள்ளம் அணைக்கட்டு திட்டத்தை சீர் படுத்திட வேண்டும் என 4 திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும் என மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், இந்த திட்டங்கள் குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை. கடத்தூரில் இருந்து வடக்கில் சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் தென்பெண்ணையாறும், தெற்கில் 15 கிலோ மீட்டர் தொலைவில் பொம்மிடி அருகில் வேப்பாடி ஆறும் உள்ளது. ஆனால் ஆறுகள் இருந்தும் கடத்தூர் பகுதிக்கு பலனில்லை. எனவே, வறட்சியை போக்க புதிய திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும், என்றார்.

## கோவை தொழில் துறையினரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யுமா மத்திய பட்ஜெட்?



கோவை, ஜன.22-
உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களின் விலை பல மடங்கு ஏற்றம், நாளுக்கு நாள் உயரும் தங்கம், வெள்ளி விலை, ஜிஎஸ்டி உட்பட பல்வேறு சிரமங்கள் தொழில் துறையில் நிலவி வரும் நிலையில், மத்திய பட்ஜெட் தொழில் துறையினரின் பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்க வேண்டும் என்ற கோவை தொழில் துறையினர் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து தொழில் துறையினர் கூறியதாவது:

கோவை வெட்கிரைண்டர் உற்பத்தியாளர்கள் மற்றும் உதிரிபாகம் தயாரிப்பாளர் சங்க செயலாளர் சவுந்திரக்குமார்: தொழில்துறையில் தாமிரம் மிக முக்கிய கனிமமாக இருக்கிறது. தாமிரத்தின் விலை கடந்த ஒரு மாத காலத்துக்குள் கிலோ ரூ.950ல் இருந்த நிலையில் தற்போது ரூ.1300ஆக உயர்ந்துள்ளது.

சில்வர், இரும்பு, காஸ்டிங், அலுமினியம் உட்பட பல்வேறு பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்திருப்பதால் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மூலப்பொருட்களுக்கு தேவையான பொருட்களின் விலை கட்டுக்கடங்காத நிலையில் உயரும்போது, பொருட்களின் விலையும் உயரவே செய்யும்.

நாள்தோறும் மாறிவரும் விலையேற்றத்துக்கு முடிவு கட்டும் வகையில் நிலையானதொரு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். வெட்கிரைண்டர் உள்ளிட்டவைகளுக்கான ஜிஎஸ்டியை 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்க வேண்டும்.

தெற்கு இந்திய தங்கம் மற்றும் வெள்ளி வர்த்தக சங்கம் (புல்லியன்) தலைவர் கார்த்திக்: கடந்த பட்ஜெட்டின்போது ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ.60 ஆயிரமாக ஆக இருந்தது. தற்போது இரட்டிப்பாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தங்கம் மற்றும் வெள்ளியின் தேவையும் அதிகரித்துள்ள நிலையில், விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. வரும் பட்ஜெட்டில் நகை மீதான சுங்க வரியை உயர்த்தாமல் இருந்தால், அது தொழில் துறைக்கு பலன் தரும்.

கோவை பம்ப்செட் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிப்பாளர் சங்கம் (கோப்மா) தலைவர் கே.மணிராஜ்: விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய முக்கியமான பொருள் மோட்டார் பம்ப் செட் ஆகும். வாட் வரியில் 5 சதவீதமாக இருந்ததை, ஜிஎஸ்டி மூலம் 18 சதவீதமாக மாற்றி உள்ளனர். இதன் விலை உயரும்போது இயல்பாகவே விவசாயிகளும், நாட்டின் வேளாண்மைத்துறையும் பாதிக்கப்படும். மீண்டும் 5 சதவீதமாக வரியை குறைக்க வேண்டும்.


தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் சொத்து பிணை இன்றி, 13 சதவீதம் வட்டியுடன் கடன் வசூலிக்கப்படுகிறது. இது தவிர ஆண்டுக்கு காப்பீடு உள்ளிட்டவற்றை காரணங்காட்டி ரூ.50 ஆயிரம் வரை பிடித்தம் செய்கிறார்கள். தொழிலுக்காக வாங்கும் கடனுக்காக 6 சதவீதம் மட்டும் வட்டி வசூலிக்க வேண்டும். நூற்றாண்டு காலமாக ஜாப் ஒர்க் பணிகளுக்கு வரி இல்லாமல் இருந்த நிலையில், ஜிஎஸ்டி 12 சதவீதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த வரிவிதிப்பை முற்றிலும் நீக்கம் செய்ய வேண்டும்.

சின்னவேடம்பட்டி தொழில் முனைவோர் சங்க கூட்டமைப்பு நிர்வாகி தேவகுமார்: சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை பொறுத்தவரை, இந்தியாவில் கோவை 5ம் இடத்தில் உள்ளது. சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு, உடையாம்பாளையம் மற்றும் சரவணம்பட்டியில் சிறு, குறு நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன.

தாமிர விலையேற்றத்தால் இன்றைக்கு வெட்கிரைண்டர், மோட்டார் பம்ப் உற்பத்தி மற்றும் கம்ப்ரஸர் உள்ளிட்ட தொழில்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளன. மோட்டார் பயன்பாட்டிலும், கம்ப்ரஸர் தொழில்துறையிலும் தாமிரம், அலுமினியம் இன்றி எந்த வேலையும் செய்ய முடியாது. அலுமினியத்தின் விலையும் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதுபோன்ற எதிர்பாராத விலையேற்ற காலங்களில் மத்திய அரசு கடனுதவி வழங்க வேண்டும். தொழில்துறை பகுதிகளில் மூலப்பொருள் வங்கிகளை ஏற்படுத்தி, அதன் மூலம் தொழில்துறைக்கு தேவையான மூலப்பொருட்களை மானியத்தில் வழங்க வேண்டும். அதேபோல் தேவையான கடனுதவி வழங்க வேண்டும். குறு நிறுவனங்களுக்கான மானியத்தை 8 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை இழுத்தடிக்காமல், ஓராண்டுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: குற்றஞ்சாட்டப்பட்ட உன்னிகிருஷ்ணனுக்கு கேரள நீதிமன்றம் ஜாமீன்!



திருவனந்தபுரம், ஜன.22-

சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறை கதவுகளில் இருந்து தங்கம் காணாமல் போனது தொடர்பான வழக்கில் முதன்மை குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் பெங்களூரை சேர்ந்த தொழிலதிபர் உன்னிகிருஷ்ணனுக்கு கேரள நீதிமன்றம் இன்று (ஜனவரி 21) ஜாமீன் வழங்கியது.

சபரிமலை கோயிலில் உள்ள துவாரபாலகர் சிலையில் இருந்த தங்கம் திருடு போனது தெடர்பாக கேரள உயர் நீதிமன்றம் அமைத்த சிறப்பு புலனாய்வுக் குழு தீவிர விசாரணை நடத்தி வருகிறது. எஸ்ஐடியைப் பொறுத்தவரையில் இரண்டு வழக்குகளை விசாரித்து வருகிறது. ஒன்று, துவாரபாலகர் சிலைகளில் இருந்த தங்கம் மாயமானது தொடர்பானது. மற்றொன்று கோயில் கதவில் இருந்த சட்டங்களில் இருந்த தங்கம் காணாமல் போனது தொடர்பானது.

இந்த நிலையில்தான், பெங்களூருவைச் சேர்ந்த தொழிலதிபர் உன்னிகிருஷ்ணன் இவ்வழக்கில் எஸ்ஐடியால் கடந்த அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் ஆய்வுக்காக சிறப்பு புலனாய்வுக் குழு சபரிமலைக்குச் சென்று விசாரணை நடத்தியது.

இதனை தொடர்ந்து உன்னிகிருஷ்ணன் ஜாமீன் கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார். சட்டப்படி 90 நாட்கள் முடிந்த பிறகும், வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு புலனாய்வுக் குழு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்ற அடிப்படையில் அவர் ஜாமீன் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த கொல்லத்தில் உள்ள லஞ்ச ஒழிப்பு நீதிமன்றம், கருவறை கதவுகளில் இருந்து தங்கம் திருடப்பட்டது தொடர்பான வழக்கில் உன்னிகிருஷ்ணனுக்கு ஜாமீன் வழங்கியது. இருப்பினும், கோயிலின் துவாரபாலகர் சிலைகளில் இருந்து தங்கம் காணாமல் போனது தொடர்பான வழக்கிலும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதால், உன்னிகிருஷ்ணன் தற்போதைக்கு சிறையிலேயே இருப்பார் என எஸ்ஐடி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு வழக்குகளிலும், உன்னிகிருஷ்ணன் மற்றும் திருவிதாங்கூர் தேவசம் போர்டின் இரண்டு முன்னாள் தலைவர்கள் உட்பட 12 பேரை சிறப்பு புலனாய்வுக் குழு இதுவரை கைது செய்துள்ளது.

# அசாமின் கோக்ரஜாரில் ராணுவம் குவிப்பு வன்முறையின் பின்புலம் என்ன?




கோக்ரஜார், ஜன.22-

அசாமின் கோக்ரஜார் மாவட்டத்தில் இரு சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட வன்முறையில் இரண்டு பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, போடோ சமூக மக்கள் மற்றும் பழங்குடியினருக்கு இடையே மோதல் வெடித்துள்ள பதற்றமான பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "ராணுவ வீரர்கள் நேற்று இரவு கரிகாவ்ன் மற்றும் அதன் அருகிலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக இன்று அப்பகுதியில் ராணுவத்தின் கொடி அணிவகுப்பும் நடத்தப்படும். தற்போது மொத்தம் நான்கு ராணுவப் படைப் பிரிவுகள் இப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்" என்று தெரிவித்தார்.

தற்போது, கோக்ரஜார் மற்றும் அண்டை மாவட்டமான சிராங்கில் ஒட்டுமொத்த சூழ்நிலையும் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அசாமில் நடந்த கும்பல் வன்முறை மற்றும் மோதல்களைத் தொடர்ந்து, ராணுவத்தால் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவு அதிரடிப் படை களத்தில் இருப்பதாகவும் அம்மாநில முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்திருந்தார்.

பின்னணி என்ன? திங்கட்கிழமை (ஜனவரி 19) இரவு, கரிகாவ்ன் பகுதியில் உள்ள மான்சிங் சாலையில், மூன்று போடோ சமூகத்தினர் பயணித்த ஒரு வாகனம் இரண்டு பழங்குடியினத்தவர் மீது மோதியது.

இதனையடுத்து அந்த மூன்று போடோக்களும், அந்த பழங்குடி கிராம மக்களால் தாக்கப்பட்டதுடன், வாகனமும் தீவைத்து எரிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் வாகனத்தில் வந்த போடோ சமூகத்தை சேர்ந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் பலத்த காயமடைந்து சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (ஜனவரி 20) உயிரிழந்தார். மேலும், காயமடைந்த மூன்று பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனை தொடர்ந்து, நேற்று (ஜனவரி 20) போடோ மற்றும் பழங்குடி சமூகத்தினர் கரிகாவ்ன் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையை மறித்து, டயர்களை எரித்து, ஓர் அரசு அலுவலகத்துக்கு தீ வைத்து, கரிகாவ்ன் காவல் புறக்காவல் நிலையத்தைத் தாக்கியதால் நிலைமை மோசமடைந்தது. இதனால் போராட்டக்காரர்கள் மீது போலீஸார் தடியடி நடத்தியும், கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் நடவடிக்கை எடுத்தனர். இதில் சில காவல் துறை அதிகாரிகள் உட்பட பலரும் காயமடைந்தனர்.

கரிகாவ்ன் கிராமத்தைச் சேர்ந்த பலரும் தாக்குதல்களுக்கு அஞ்சி தப்பி ஓடியதைத் தொடர்ந்து, கோக்ராஜார் மாவட்ட நிர்வாகம் கரிகாவ்ன் உயர்நிலைப் பள்ளி மற்றும் குவாஜன்புரி அமன்பாரா உயர்நிலைப் பள்ளியில் இரண்டு நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பிஎன்எஸ் பிரிவு 163இன் கீழ் கோக்ராஜார் மாவட்டம் முழுவதும் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கோக்ராஜார் மற்றும் சிரங் மாவட்டங்களில் இணையம் மற்றும் செல்போன் சேவைகளையும் உள்துறை அமைச்சகம் நிறுத்தி வைத்துள்ளது.

# கோயில்களில் தரிசன கட்டண உயர்வு: வழிகாட்டுதல்களை உருவாக்க அரசுக்கு ஐகோர்ட் அவகாசம்



மதுரை, ஜன.22-

தமிழக கோயில்களில் தரிசனக் கட்டண உயர்வு தொடர்பான வழிகாட்டுதல்களை உருவாக்க, அரசுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூரைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில்உள்ள கோயில்களில் இடைநிறுத்த தரிசனம் மற்றும் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வரும் தரிசனங்களுக்கான கட்டணத்தை உயர்த்துவது தொடர்பான அறிவிப்புகள், பக்தர்களிடம் ஆட்சேபனை கோராமல் செயல்படுத்தப் படுகின்றன.

இது தொடர்பான அறிவிப்புகளை கோயில் வளாகத்தில் பக்தர்கள் அதிகம் செல்லாத இடங்களில் ஒட்டுகின்றனர். ஏதேனும் ஒரு நாளிதழில் விளம்பரம் செய்கின்றனர். இதனால் கட்டண உயர்வு தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பக்தர்களால் உரிய காலத்தில் ஆட்சேபனைகளை தெரிவிக்க முடியாமல் போகிறது.

பின்னர் ஆட்சேபனைகள் வரவில்லை என்று அறநிலையத் துறை ஆணையருக்கு தகவல் தெரிவித்துவிட்டு, கட்டண உயர்வை அமல்படுத்துகின்றனர். கோயிலுக்கு வரும் போதுதான் கட்டணம் உயர்த்தப்பட்ட விவரம் பக்தர்களுக்கு தெரியவருகிறது. தமிழக கோயில்களுக்கு வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் பக்தர்கள் வருகின்றனர். எனவே, கட்டணத்தை உயர்த்தும்போது அந்த பக்தர்களிடமும் கருத்து கேட்க வேண்டியது அவசியம். இதனால், கட்டண உயர்வு அறிவிப்பு தொடர்பாக மாவட்டத்துக்குள் மட்டும் விளம்பரம் செய்வதுசரியான நடவடிக்கை அல்ல.

மேலும், பல்வேறு கோயில்களிலும் ஒரு மணி நேர நிறுத்த தரிசனம் அமல்படுத்தப்படும் என அறநிலையத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். எனவே, கோயில் நிர்வாகத்தின் அறிவிப்பு அதிக பக்தர்களை சென்றடையும் வகையில் இணையதளங்களில் பதிவேற்றம் செய்யவும், தமிழகம் முழுவதும் தெரியும் வகையில் நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், கோயில் வளாகத்தில் பக்தர்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் அறிவிப்பு பலகை வைக்கவும், ஆட்சேபனைகளை தெரிவிக்க 30 நாட்கள் காலஅவகாசம் அளிக்கவும், ஆட்சேபனை கடிதங்கள், கோயில் நிர்வாக முடிவு, ஆணையரின் அனுமதி ஆகியவற்றை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது உள்ளிட்ட கட்டண உயர்வு நடவடிக்கையின் போது, கோயில் நிர்வாகம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், "புதிய வழிகாட்டுதல் உருவாக்கப்பட்டு, அறிவிக்கப்படும். அதற்கு அவகாசம் தேவை" என்று கோரப்பட்டிருந்தது. இதையடுத்து, விசாரணையை பிப். 23ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# பாஜக வங்கிக் கணக்குகளில் ரூ.10,000 கோடி வைப்பு தொகை




புதுடெல்லி, ஜன.22-

மத்தியில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. நாடு முழுவதும் 20 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் பாஜக மற்றும் பாஜக கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது.

அந்த கட்சியில் சுமார் 18 கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்தியா மட்டுமன்றி, உலகிலேயே அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சியாக பாஜக உருவெடுத்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பாஜகவுக்கு கிடைக்கும் நன்கொடை கணிசமாக அதிகரித்து வருகிறது.

கடந்த 2024 25ம் நிதியாண்டில் பாஜகவுக்கு ரூ.6,769 கோடி நன்கொடை கிடைத்தது. தற்போதைய சூழலில் பாஜகவின் வங்கிக் கணக்குகளில் சுமார் ரூ.10,000 கோடி உள்ளது. இதில் நிரந்தர வைப்பு தொகையாக ரூ.9,390 கோடி முதலீடு செய்யப்பட்டு இருக்கிறது.

இதன் மூலம் கடந்த 2024 25ம் ஆண்டில் ரூ.634 கோடி வட்டி கிடைத்திருக்கிறது. கடந்த 2024 25ம் ஆண்டுகளில் டெல்லி, ஒடிசாவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. இந்த மாநிலங்களின் தேர்தல் பிரச்சாரத்துக்காக பாஜக ரூ.3,335.36 கோடியை செலவிட்டிருக்கிறது. தேர்தல் ஆணையத்தில் பாஜக அண்மையில் தாக்கல் செய்த அறிக்கையின் மூலம் இந்த தகவல்கள் தெரியவந்துள்ளன.

# பூந்தமல்லி வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவைக்கு இறுதி கட்ட ஒப்புதல்: மெட்ரோ நிர்வாகம் தகவல்



சென்னை, ஜன.22-

பூந்தமல்லி வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவைக்கு ரயில்வே வாரியம் இறுதிகட்ட ஒப்புதல் வழங்கியுள்ளது. மெட்ரோ சேவையின் இரண்டாம் கட்ட பணிகள் மாதாவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலும், பூந்தமல்லி முதல் சென்னை கலங்கரை விளக்கம் வரையிலும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் மூன்று வழித்தடங்களில் 118.9 கிமீ தொலைவிற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் முக்கிய வழித்தடமான பூந்தமல்லி முதல் கலங்கரை விளக்கம் வரை உள்ள வழித்தடத்தில் 26 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் பணிகள் விறுவிறுப்பாக நடைப்பெற்று வருகிறது. இதில் பூந்தமல்லி முதல் போரூர் இடையே 95 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இறுதிக்கட்டப் பணிகள் மற்றும் கட்டடக்கலைப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வந்தது.

இந்த வழித்தடத்தில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்தது. அடுத்ததாக பூந்தமல்லி முதல் போரூர் இடையே பாதுகாப்பு சான்றிதழ் பெறுவதற்கான சோதனை ஓட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்றது. 90 கிலோ மீட்டர் வேகத்தில் மெட்ரோ ரயில்கள் இயக்கி பயணிகளின் பயண வசதி குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் ரயில் பெட்டிகளின் வசதி, பயணிகளின் பாதுகாப்பு, பிரேக்கிங் தொழிநுட்பம், தண்டவாளத்தின் தரம், கட்டுமானம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்நிலையில் பூந்தமல்லி முதல் போரூர் இடையிலான மெட்ரோ ரயில் பாதை சிக்னலுக்கு ரயில்வே வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிலையில் தற்போது பூந்தமல்லி முதல் வடபழனி இடையே மெட்ரோ ரயில் இயக்க மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு ரயில்வே வாரியம் இறுதிகட்ட ஒப்புதல் வழங்கியது.

ரயில்வே வாரியம் ஒப்புதலை அடுத்து பிப்ரவரி முதல் பூந்தமல்லி வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவை தொடங்க வாய்ப்பு உள்ளது. 15.8 கி.மீ நீளமுள்ள இந்த மெட்ரோ வழித்தடத்தில் சமீபத்தில் சோதனை ஓட்டங்கள் வெற்றிகரமாக நடந்த நிலையில், விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாஜக புதிய தலைவராக நிதின் நபின் நியமனம்; ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை

## காங்கிரஸ் எம்பி ரேணுகா சவுத்ரி விமர்சனம்



புதுடெல்லி, ஜன.22-

பாஜக தேசியத் தலைவராக நிதின் நபின் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நியமனம் ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை என்று காங்கிரஸ் விமர்சித்துள்ளது. பாஜகவின் தேசியத் தலைவராக இருந்த ஜே.பி.நட்டாவின் பதவிக்காலம் முடிந்ததை அடுத்து, பீகார் மாநிலத்தை சேர்ந்த நிதின் நபின் (45) புதிய தலைவராக நேற்று நியமிக்கப்பட்டார். 5 முறை எம்எல்ஏவாக இருந்த இவர், கட்சியின் வரலாற்றிலேயே மிக இளம் வயதில் தலைவர் பதவியை அலங்கரிக்கும் நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இவர் ஜனநாயக முறைப்படி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக பாஜக எம்பி பிரவீன் கண்டேல்வால் தெரிவித்தார். மேலும் டெல்லியில் நடந்த விழாவில் பிரதமர் மோடி, புதிய தலைவரை 'எனது பாஸ்' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.இந்நிலையில் நிதின் நபின் நியமனம் குறித்து காங்கிரஸ் எம்பி ரேணுகா சவுத்ரி கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'நிதின் நபின் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்படவில்லை; மாறாக ஆர்எஸ்எஸ் அமைப்பால் மகுடம் சூட்டப்பட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியில் கார்கே மற்றும் சசி தரூர் இடையே நடந்த உண்மையான உட்கட்சி தேர்தல் போல் பாஜகவில் நடக்கவில்லை. இந்த பாவம் அறியாத இளைஞருக்கு தற்போதைய கட்சித் தலைமையில் எவ்வளவு சுதந்திரம் இருக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம், வயதை வைத்து தலைமையை தீர்மானிப்பதை விட, திறமை மற்றும் அனுபவமே முக்கியம்' என்று அவர் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளார்.

# ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம்



சென்னை, ஜன.22-

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம். இவர் ஓபிஎஸ்ஸின் தீவிர ஆதரவாளராக இருந்தவர்.

முன்னதாக, ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏவாக இருந்த அவர் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். சட்டப்பேரவைக்கு சென்று சபாநாயகர் அப்பாவுவிடம் தனது ராஜினாமா கடிதத்தை வழங்கினார். தொடர்ந்து அவர் திமுகவில் இணைவார் என்று செய்திகள் வெளியாகின.

எதிர்பார்த்தபடி, அவர் ராஜினாமாவுக்குப் பின்னர் சென்னை அண்ணா அறிவாலயத்துக்குச் சென்று ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

4 முறை எம்எல்ஏ.. வைத்திலிங்கம் 4 முறை ஒரத்தநாடு எம்எல்ஏவாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிமுக ஆட்சியில் அமைச்சராகவும் இருந்துள்ளார். அதிமுக உட்கட்சி பூசலின் விளைவாக ஓபிஎஸ் ஆரம்பித்த அதிமுக தொண்டர் உரிமை மீட்புக் குழுவில் வைத்திலிங்கம் இருந்தார். ஓபிஎஸ்ஸின் தீவிர ஆதரவாளராகவே அவர் பார்க்கப்பட்டவர்.

இந்நிலையில் அவர் இன்று திமுகவில் இணைந்துள்ளார். கட்சித் தாவல் தடை சட்டத்தின்படி எம்எல்ஏவாக இருப்பவர் இன்னொரு கட்சியில் சேரக்கூடாது என்பதால் ஒரத்தநாடு எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவர் திமுகவில் இணைந்துள்ளார்.

வைத்திலிங்கம் திமுகவில் இணைந்துள்ளது ஓபிஎஸ் அரசியலுக்கு நெருக்கடியாகவே பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியே வந்துவிட்ட ஓபிஎஸ், அவரது ஒவ்வொரு ஆதரவாளராக இழந்து வருகிறார்.

அவரது ஆதரவாளர்கள் மனோஜ் பாண்டியன் ஆலங்குளம் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு திமுகவில் இணைந்தார், அதேபோல் மருது அழகுராஜ், முன்னாள் எம்எல்ஏ சுப்புரத்தினம் ஆகியோரும் திமுகவில் இணைந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

திமுகவில் இணைந்தது ஏன்? திமுகவில் இணைந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த வைத்திலிங்கம், "எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக செயல்பாடுகள் உகந்ததாக இல்லை. அதிமுக சுதந்திரமாக செயல்படவில்லை. சர்வாதிகாரமாக செயல்படுகிறது.

அதிமுகவில் சேருமாறு தனிப்பட்ட முறையில் எனக்கு அழைப்பு வந்தது. நான் அங்கு தனியாக இணைய விரும்பவில்லை. பிரிந்தவர்கள் ஒன்றாக சேர வேண்டும் என்ற நோக்கில் நான் அதிமுகவுக்கு செல்லவில்லை.

அதேபோல், கூட்டணி தொடர்பான முடிவில் ஓபிஎஸ் தாமதம் செய்ததால் திமுகவில் இணைந்துள்ளேன்.

ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலினை மக்கள் போற்றுகிறார்கள். எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து மக்கள் மனதில் உள்ளார் ஸ்டாலின். அதனால் அண்ணா தொடங்கிய தாய் கழகத்தில் இணைந்துள்ளேன்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நகரம் பிளிஸ்வில்லா தெருவில் பாதுகாவலரான புனித செபஸ்தியாரின் அர்ச்சிப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவில் பங்குத்தந்தையர்கள், கன்னியாஸ்திரிகள் மற்றும் ஜாதி, மத பேதமின்றி அனைத்து பொதுமக்களும் கலந்து கொண்டனர். அனைத்து கட்சியை சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இறுதியாக அனைத்து பொதுமக்களுக்கும் சிறப்பான விருந்து உபசரிப்பு நடைபெற்றது.



■ நாங்குநேரி சட்டமன்ற தொகுதி செண்பகராமநல்லூர் ஊராட்சி நாச்சான்குளம் கீழூரில் நடைபெற்ற திராவிட பொங்கல் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு விளையாட்டு போட்டி கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நாங்குநேரி மேற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஞி.சி.சின்னத்துரை பரிசுகள் வழங்கினார்கள் உடன் ஊர் பெரியவர்கள் ,காமராஜர் இளைஞர் அணி ,இளம் பெண்கள் ,திமுக நிர்வாகிகள் ,ராஜா, ராஜ்குமார், இட்ட மொழி மகேஷ், ஜெகன், ஞி.முத்துக்குட்டி , உய்க்காட்டு ராஜா, முத்துச்செல்வன்,விமுத்துக்குட்டி, செட்டியான்,ஊர் பொதுமக்கள் விளையாட்டுப் போட்டிகளை கண்டு ரசித்தனர்.




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வாக்களிப்பதன் முறையை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வாக்களிக்கும் இயந்திரத்தை காட்சிப் படுத்தப்பட்டுள்ளது



# புளியங்குடி 3வது வார்டு பகுதியில் புதிய குடிநீர் குழாய் பதிப்பு அடிக்கல் நாட்டு விழா

தென்காசி, ஜன.22-

தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட 3வது வார்டு பகுதியில் ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கான பூமி பூஜை விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு புளியங்குடி நகர்மன்றத் தலைவி விஜயா சௌந்தர பாண்டியன் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையாளர் நாகராஜ் மற்றும் காந்திமதி அம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் ஓவர்சியர் சரவணன், வார்டு செயலாளர் மணிகண்டன், சந்திரசேகர், நகராட்சி ஒப்பந்ததாரர் அந்தோணி, பேராசிரியர் பழனிச்சாமி, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த திட்டத்தின் மூலம் 3வது வார்டு மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சீமானூத்து ஊராட்சியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்தார்.

# வளர்ச்சி திட்டப் பணிகளை தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு

தென்காசி, ஜன.22-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சி மற்றும் மேலநீலிதநல்லூர், தென்காசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., ஊரகவளர்ச்சித்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியில் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் புதியதாக 32 வீடுகள் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் சாலை, வாறுகால், பைப்லைன், மின்கம்பங்கள் அமைத்தல் பணிகள் நடைபெற்று வருவதையும், மேல நீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குருக்கள்பட்டி ஊராட்சி சமத்துவபுரத்தில் ரூ.6.10 கோடி மதிப்பீட்டில் புதியதாக 100 வீடுகள் கட்டப்பட்டு வருவதையும், தென்காசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாட்டாக்குறிச்சி ஊராட்சியில் திருநங்கைகளுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.62 இலட்சம் மதிப்பீட்டில் 52 வீடுகள் கட்டப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்க மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்செல்வம் (சங்கரன்கோவில்), செல்வராஜ், கண்ணன் (மேலநீலிதநல்லூர்), மாரியப்பன் (தென்காசி) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், குறிஞ்சி நகரில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை, வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவுகள், குழந்தைகளின் வயதுக்கேற்ற உயரம் மற்றும் எடை உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்தார்



# நஷ்ட ஈடு கேட்கிறது அமேசான் ப்ரைம்

## ‘ஜனநாயகன்’ படத்துக்கு எதிராக வழக்கு தொடர முடிவு: புது சிக்கலால் படக்குழு அதிர்ச்சி

சென்னை, ஜன.22-

‘ஜனநாயகன்’ படத்துக்கு அமேசான் ப்ரைம் மூலம் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. விஜய், பூஜா ஹெக்டே மமிதா பைஜு நடித்துள்ள ‘ஜனநாயகன்’ படத்தின் சென்சார் பிரச்சனையால் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகாமல் படம் தள்ளிப்போய் இருக்கிறது. உச்சநீதிமன்றத்தில் தயாரிப்பாளர் வழக்கு தொடர்ந்தாலும் உயர்நீதிமன்ற வழக்கு விசாரணையில் தலையிட விரும்பவில்லை என கூறிவிட்டதால், சென்னை உயர் நீதி மன்ற தீர்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டும் என்கிற நிலை தான் இருக்கிறது. இந்த வழக்கின் விசாரணை நேற்று நடைபெற்றது. ஜனநாயகன் தயாரிப்பாளர் தரப்பு மற்றும் சென்சார் போர்டு தரப்புக்கும் தலா அரை மணி நேரம் வாதாட நேரம் கொடுக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தீர்ப்பை ஒத்திவைத்தனர். இதனால் படம் எப்போது வெளியாகும் எனத் தெரியாமல் படக்குழுவினர் குழப்பத்தில் உள்ளனர்.

இந்நிலையில் இப்போது படத்துக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதன்படி ‘ஜனநாயகன்’ படத்தால் ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு உரிய நஷ்ட ஈடு தர வேண்டும் என அமேசான் ப்ரைம் ஓடிடி நிறுவனம் கேட்டிருக்கிறது. இந்த படத்தின் ஓடிடி உரிமை அமேசான் ப்ரைம்க்கு பெரும் தொகைக்கு விற்கப்பட்டது. படம் வெளியாகி, சில நாட்களிலேயே ஓடிடியில் ஒளிபரப்பாகும் விதமாக இதன் உரிமம் பேசப்பட்டு, ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால் இப்போது தாமதம் ஆவதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யாவிட்டால், நீதிமன்றத்தில் வழக்கு தொடருவோம் என அமேசான் ப்ரைம் நிறுவனம் ‘ஜனநாயகன்’ படத்தை தயாரித்துள்ள கேவிஎன் நிறுவனத்தை எச்சரித்துள்ளது. இதனால் ‘ஜனநாயகன்’ படத்திற்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# திருச்சியில் ரூ.8.37 லட்சம் மதிப்புடைய ரூ.200 கள்ள நோட்டுகள் பறிமுதல்

## மகாராஷ்டிராவை சேர்ந்த இருவர் கைது

திருச்சி, ஜன.22-

திருச்சி மாவட்டம் துவாக்குடி அருகே காரில் கடத்திவரப்பட்ட ரூ.8 லட்சத்து 37 ஆயிரத்து 800 மதிப்புடைய ரூ.200 கள்ள நோட்டுகளை போலீஸார் பறிமுதல் செய்தனர்.



திருச்சி மாவட்டம், துவாக்குடியில் உள்ள பெட்ரோல் பங்கில் நேற்றிரவு மகாராஷ்டிர மாநிலத்தின் பதிவெண் கொண்ட கார் ஒன்று பெட்ரோல் நிரப்பியது. அதற்குரிய தொகையாக அவர்கள் கொடுத்த ரூ.200 நோட்டுகள் கள்ள நோட்டுகள் என்பதை அறிந்த பெட்ரோல் பங்க் ஊழியர் துவாக்குடி காவல் நிலையத்திற்கு புகார் அளித்தார்.

அதையடுத்து, துவாக்குடி போலீஸார் துரிதமாக செயல்பட்டு வெளி மாநில பதிவெண் கொண்ட க்விட் காரை காட்டூர் மஞ்சத்திடல் செக் போஸ்ட்டில் மடக்கிப் பிடித்தனர். காரை சோதனையிட்டபோது, 2 பைகளில் ரூ. 200 கள்ள நோட்டுகள் கட்டு, கட்டாக இருந்தது. அதையடுத்து 41 கட்டுகள், 89 நோட்டுகள் உட்பட ரூ.8,37,800 மதிப்புடைய கள்ள நோட்டுகளை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

மேலும் காரில் வந்த மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த ரமேஷ் பாபாரோ பாஹிர் (54), நாராயண ராம் (34) ஆகிய இருவரையும் கைது செய்தனர். போலீஸாரின் முதற்கட்ட விசாரணையில், அவர்கள் இருவரும் மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் உள்ளிட்ட பகுதிகளில் கள்ள நோட்டுகளை மாற்றியபடியே திருச்சி வழியாக செல்லும்போது பிடிபட்டது தெரியவந்துள்ளது.

மேலும், கள்ள நோட்டு விவகாரத்தின் பின்னணியில் உள்ள கும்பல் யார்? இதுவரை தமிழகத்தில் எவ்வளவு பணம் கள்ள நோட்டுகளாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




# நாங்குநேரி டிஎஸ்பி முகாம் அலுவலகத்தில் புகுந்த நாகப்பாம்பு தீயணைப்புத் துறையினர் லாவகமாகப் பிடித்து வனப்பகுதியில் விடுவிப்பு

திருநெல்வேலி, ஜன.22-

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் (ஞிஷிறி) முகாம் அலுவலகத்தில் புகுந்த நாகப்பாம்பை, தீயணைப்புத் துறையினர் லாவகமாகப் பிடித்து பாதுகாப்பாக வனப்பகுதியில் விட்டனர்.



நாங்குநேரி உட்கோட்ட டிஎஸ்பி அலுவலக வளாகத்தில் உள்ள கிணற்றில் நல்ல பாம்பு (நாகப்பாம்பு) புகுந்தது. கிணற்றுக்குள் நல்ல பாம்பு இருப்பதை நாங்குநேரி டிஎஸ்பி தர்ஷிகா நடராஜன் இது குறித்து உடனடியாக நாங்குநேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குத் தகவல் தெரிவித்தார்.

தகவலின் பேரில், தீயணைப்பு நிலைய அலுவலர் எல்.எஃப். முருகேசன் (LF Murugesan) தலைமையில் 6 வீரர்கள் அடங்கிய 7 பேர் கொண்ட குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

பாம்பு அங்குள்ள ஒரு கிணற்றுப் பகுதி மற்றும் திறந்தவெளியில் பதுங்கியிருந்தது. தீயணைப்பு வீரர்கள் தகுந்த உபகரணங்களுடன் பாம்பைப் பிடிக்கத் தொடங்கினர். அப்போது, அந்த நாகப்பாம்பு தனது படத்தை விரித்து ஆக்ரோஷமாகச் சீறியது.

பாம்பு சீறிய போதிலும், எவ்வித பதற்றமும் இன்றி தீயணைப்பு நிலைய அலுவலர் முருகேசன் மற்றும் அவரது குழுவினர் மிகவும் நிதானமாகச் செயல்பட்டனர். நீண்ட பிடிக் கருவிகள் மூலம் பாம்பின் கவனத்தைத் திசைதிருப்பி, அதனை ஒரு பிவிசி (PVC) குழாய்க்குள் நுழையச் செய்தனர். பாம்பிற்கு எவ்வித காயமும் ஏற்படாத வகையில் மிகவும் லாவகமாக அதனைப் பிடித்துப் பைக்குள் அடைத்தனர்.

பிடிபட்ட அந்த நாகப்பாம்பு சுமார் 6 அடி நீளம் கொண்டது. பின்னர் அந்தப் பாம்பை மக்கள் நடமாட்டம் இல்லாத அடர்ந்த வனப்பகுதிக்குக் கொண்டு சென்ற தீயணைப்புத் துறையினர், அதனைப் பாதுகாப்பாக விடுவித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000